டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 8.08.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 044 - Madurai | Online Edition

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

# கத்திரிக்காய்க்கான விதைப்புக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

கோயம்புத்தூர், ஆக.7

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் 2024-25 ஆம் ஆண்டிற்கான இறுதி மதிப்பீடுகளின்படி, கத்திரிக்காய் உற்பத்தியில் இந்தியா உலகளவில் முக்கிய நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. நாட்டிற்குள் மேற்கு வங்கம், ஒடிசா மற்றும் குஜராத் ஆகியவை முக்கிய உற்பத்தி மாநிலங் களாக உள்ளன. இந்தியாவில் 2024-25 ஆம் ஆண்டில் 6.89 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கத்திரிக்காய் பயிரிடப்பட்டு, மொத்தம் 131.31 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் சராசரி உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 19.06 டன்களாகும். தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகியவை முக்கிய உற்பத்தி மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில் 2024-25 ஆம் ஆண்டில் 0.20 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கத்தரிக்காய் பயிரிடப்பட்டு, மொத்தம் 2.68 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் அதிகளவிலான புதிய கத்திரிக்காய் வரத்து உள்ள முக்கிய சந்தை மையங்களாக ஓசூர், திண்டுக்கல், சேலம் மற்றும் கோயம்புத்தூர் சந்தைகள் விளங்குகின்றன. மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா போன்ற அண்டை மாநிலங் களிலிருந்து கத்திரிக்காய் தமிழ்நாட்டிற்கு வருகிறது. அதேபோல, தமிழ்நாட்டிலிருந்து கத்திரிக்காய் கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களின் சந்தை களுக்குச் செல்கிறது.

இச்சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வுகள் மையத்தின் கீழ் இயங்கும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் சந்தைகளில் கடந்த 15 ஆண்டுகளாக நிலவிய கத்திரிக்காய் விலைகளை ஆய்வு செய்து, சந்தைக் கணிப்பொன்றையும் மேற்கொண்டது. காலத் தொடர் பகுப்பாய்வு முடிவுகளின்படி, அறுவடை காலத்தில் தரமான கத்திரிக்காயின் பண்ணை விலை கிலோவிற்கு சுமார் ரூ.37 முதல் ரூ.38 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டு உள்ளது.

எனவே, விவசாயிகள் இதற்கேற்ப தங்கள் விதைப்பு முடிவு களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சந்தைப்படுத்தல் தகவல் விவரங்களுக்கு உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வுகள் மையம் மற்றும் தொழில்நுட்ப விவரங் களுக்குத் பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறிப் பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர் – 641 003 தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், ஆக.7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 11.08.2026 மற்றும் 12.08.2026 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெறும்.

சிறுதானிய வகைகளான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, தினை, பனிவரகு போன்றவை மக்களால் உணவில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புறங்களில் கேழ்வரகு மட்டும் பயன்பாட்டில் உள்ளது. சிறுதானிய வகைகளில் உள்ள சத்துக் களையும் அவற்றை உபயோகித்து தயாரிக்கப்படும் கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அவையாவன

- பாரம்பரிய உணவுகள்
- பிழிதல்
- அடுமனைப் பொருட்கள்
- உடனடி தயார்நிலை உணவுகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும். முன்பதிவிற்கு : https://forms.gle/4AeCvBPx3NX6igEs6

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**10. காலிஃப்ளவர் சூப்**



**தேவையான பொருட்கள்**

காலிஃப்ளவர் — 2 கப்

வெங்காயம் — 1

பூண்டு — 2 பல்

மிளகு தூள் – சிறிதளவு

உப்பு – தேவையான அளவு


**செய்முறை**

வேக வைத்து அரைத்து 5 நிமிடம் கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# ஆடிப்பட்டத்தில் அதிக மகசூல் பெற ஆலோசனை



திண்டுக்கல், ஆக.7

விதைகளை ஆய்வு செய்து பயிரிட்டால் ஆடிப்பட்டத்தில் அதிக மகசூல் பெறலாம் என திண்டுக்கல் விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் ப.பிரபாகரன் மற்றும் ம.ஜமுனாராணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது : 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழிக்கேற்ப ஆடிப்பட்டமானது பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஏற்ற பருவமாகும். பொதுவாக விவசாயிகள் முந்தைய பருவத்தில் சேகரித்து வைத்த விதைகளை அடுத்த பருவத்தில் விதைப்பதற்கு பயன்படுத்துவது வழக்கம். அவ்வாறு செய்யும் பொழுது தங்கள் வசமுள்ள விதைகள் தரமாக உள்ளனவா என ஆய்வு செய்து விதைப்பதன் மூலம் அதிக மகசூல் பெறலாம்.

விதைகளின் முளைப்புத்திறனைப் பாதிக்கும் காரணிகளில் ஈரப்பதம் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு பயிருக்கும் நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் இருக்க வேண்டும். உதாரணமாக நெல்லிற்கு 13%, சோளம், கம்பு மற்றும் மக்காச்சோளத்திற்கு 12%, பருத்தி மற்றும் வெண்டைக்கு 10%, பயறு வகைகளுக்கு 9%, பூசணி, பாகல், சுரை, புடலை மற்றும் பீர்க்கனுக்கு 7% இருக்க வேண்டும். இவற்றிற்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். மேலும் விதை யோடு சேர்ந்து பூஞ்சாணம் வளர்வதற்கு வாய்ப்புள்ளதால், பூஞ்சாணத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு கூடுதல் செலவாகிறது. எனவே இதனைத் தவிர்ப்பதற்கும், உகந்த பயிர் எண்ணிக்கையை பராமரிப்பதற்கும் ஈரப்பத பரிசோதனை அவசியமாகும்.

ஈரப்பதம் மற்றும் முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொள்வதற்கு விவசாயிகள் தங்கள் கைவசமுள்ள விதைக்குவியலில் இருந்து 100 கி விதை மாதிரியை காற்றுப்புகாத பைகளில் அடைத்து திண்டுக்கல் உழவர் மைய வளாகத்தில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் பயிர் இரகம், முழு முகவரியுடன், ஒரு விதை மாதிரி ஒன்றிற்கு ரூ.80/- பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பரிசோதிக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!




காஞ்சிபுரம், ஆக.7

ஆடி மாதம் தொடங்கி இருப்பதால் ‘ஆடி பட்டம் தேடி விதை‘ என்ற பழமொழிற்கு ஏற்ப மழை சில இடங்களில மித மாகவும் மற்றும் சில இடங்களில் அதிக அளவில் மழை பெய்து கொண்டு இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகள் விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும்.

குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைபரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத் தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியயனவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும் என அ.இளையராஜா, விதை பரிசோதனை அலுவலர் மற்றும் வ.கோ.பாலபாரதி, வேளாண்மை அலுவலர் கேட்டுக் கொண்டார்கள்.

விதை மாதிரிகளை விதை பரிசோதனை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், பஞ்சுபேட்டை, காஞ்சிபுரம் - 631 502 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.




# வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்



நாமக்கல், ஆக.7

வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் (அட்மா திட்டம்) 5.8.26 அன்று வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.

மேற்கண்ட நிகழ்ச்சி நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், பிரேமா, தலைமையில் நடைபெற்றது. மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலிருந்தும் சுமார் 100 மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்,

இந்நிகழ்ச்சியில் புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில், வேளாண்மை மற்றும் சகோதர துறைகளான தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை சார்பாகவும், முன்னோடி விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை கொண்டு கருத்துக்காட்சி அரங்கம் அமைத்து காட்சிப்படுத்தப் படுத்தப்பட்டது. இதில் ஏத்தாப்பூர், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், சந்தியூர், வேளாண் அறிவியல் நிலையம் விஞ்ஞானிகள், லத்துவாடி, வேளாண் அறிவியல் நிலையம் விஞ்ஞானிகள் மற்றும் நாமக்கல், வேட்டாம்பாடி, பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரியை சேர்ந்த உதவி பேராசிரியர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பம் குறித்து எடுத்து கூறினர்.

மேலும், விவசாயிகளின் பண்ணை சார்ந்த பிரச்சனை களுக்கு, விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி மூலம் விவசாயிகள் கேட்ட சந்தேகங்களுக்கு விரிவாக விளக்க மளித்தனர் என அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# அட்மா திட்டத்தின் கீழ் மண்வள மேலாண்மை உள்மாவட்ட விவசாயிகள் பயிற்சி

சிவகங்கை, ஆக.7

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டாரத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டம் (SSEPERS) அட்மா திட்டத்தின் கீழ் கண்ணங்குடி கிராமத்தில் மண்வள மேலாண்மை குறித்து உள்மாவட்ட விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன் அறிவுரையின்படி துணை வேளாண்மை அலுவலர் மனோஜ்குமார், தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்தும்,மண்ணின் உள்ள களர், உவர், அமிலத்தன்மையை கண்டறிந்து அதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்து பயிர் செய்தல் மண் பரிசோதனை செய்வதால் மண்ணில் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் நிலவரம் விவசாயிகளுக்கு தெரிய வருகிறது. நிலவரத்திற்கு ஏற்ப பயிர்களை பயிர் செய்வது குறித்து எடுத்துரைத்தார்.



வேளாண்மை அறிவியல் நிலையம் தொழில்நுட்ப வல்லுநர் பிரபு, களர் நிலம் சீர்திருத்தம் முறைகள் இயற்கை உரங்களான தொழுஉரம் தழைஉரங்கள் இடுவது மற்றும் வடிகால் வசதி பெருக்குதல், சுண்ணாம்பு சத்து இல்லாத நிலத்திற்கு ஏக்கருக்கு 500 கிலோ ஜிப்சம் இடுதல் மற்றும் அமில நிலச் சீர்திருத்தம், உவர் நிலச் சீர்திருத்தம் ,மண் ஆய்வு எடுப்பதன் முறைகள், பயன்கள், எவ்வாறு உரம் இடுவது என்னென்ன உரங்கள் இடுவது போன்றவைகள் பற்றி எடுத்துரைத்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் சமச்சீர் உர மேலாண்மை பற்றி கூறினார். இப்பயிற்சியின் முடிவில் மண் மாதிரி எடுத்தல் செயல்விளக்கம் பற்றி உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ்குமார் செய்து காண்பித்தார்.

# நிலக்கடலையில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய உள்வளாக பயிற்சி



கடலூர், ஆக.7

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், இரண்டு நாள் (06.08.26 மற்றும் 07.08.26) பயிற்சி-யாக நிலக்கடலையில் மேம் படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய உள்வளாக பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பங்கள், புதிய இரங்கள், விதைநேர்த்தி, உயிர் உரங்கள், நோய் எதிர் உயிர் கொல்லி விதைநேர்த்தி, களை நிர்வாகம், ஜிப்சம் மற்றும் மண் அனைத்தல் பயன்பாடு, வேம்பு பொருட்கள் கொண்டு பூச்சி நோய் பாதுகாப்பு, த.வே.ப.க பயிர் ஊக்கி நிலக்கடலை ரிச் மற்றும் த.வே.ப.க இணையத்தளம் பயன்பாடு பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மேலும் முனைவர் கமலக்கண்ணன் (மண்ணியியல் துறை), நிலக்கடலையில் சமச்சீர் உர மேலாண்மை பற்றி விரிவாக விளக்கினார். முனைவர் க.கலைச்செல்வி (உழவியல் துறை), நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார். வேளாண்மை துணை இயக்குநர் அமிர்தராஜ் மற்றும் சுகன்யா (வேளாண்மை அலுவலர்), ஆகியோர் வேளாண் மத்திய, மாநில திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும் வெங்கடேசன் (துணை வேளாண்மை அலுவலர்) மற்றம் சித்ராங்கி (உதவி வேளாண்மை அலுவலர்) ஆகியோர் கலந்துக் கொண்டனர். மேலும் இப்பயிற்சியில் த.வே.ப.க விதை அமிர்தம் மற்றும் அதன் பயன்பாடும் செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில் இப்கோ உர நிறுவனம் கலந்துக்கொண்டு, விவசாயிகளுக்கு தனது நிறுவன பொருட்கள் மற்றும் பயன்பாடுகள் பற்றி விளக்கினார். இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்பமேலாளர் கலந்துக் கொண்டனர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயிகளுக்கு வருமானம் தரும் கார்பன் கிரெடிட்




உலகளாவிய ரீதியில் காலநிலை மாற்றம் பெரும் சவாலாக உருவெடுத்துள்ள தற்போதைய சூழலில் வளிமண்டலத்தில் அதிகரிக்கும் பசுமைக் குடில் வாயு உமிழ்வைக் கட்டுப்படுத்துவது அனைத்து நாடுகளின் முதன்மை இலக்காக மாறியுள்ளது. இந்த சூழலை எதிர் கொள்ள உருவாக்கப்பட்டது தான் கார்பன் கிரெடிட் (CARBON CREDIT) திட்டமாகும்.

1 மெ.டன் அளவிலான கார்பன் டை ஆக்சைடு அல்லது அதற்குச் சமமான பசுமைக்குடில் வாயுவை வளிமண்டலத்திலிருந்து அகற்றுவது அல்லது அது வெளியிடும் போதே தடுப்பது ஒரு கார்பன் கிரெடிட் எனக் கணக்கிடப்படுகிறது. தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தித் துறைகள் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாக வெளியிடும் கார்பனைக் கட்டுப்படுத்தவும் ஈடு செய்யவும் உதவும் கருவியாக இது இயங்குகிறது.

**கார்பன் வெளியிடு?**

விவசாயத் துறை என்பது வளிமண்டலத்தில் கார்பன் வெளியிடும் மூலமாக மட்டுமின்றி வளிமண்டலக் கார்பனை உறிஞ்சி சேமித்து வைக்கும் பெரும் களஞ்சியமாகவும் திகழ்கிறது. சூழலுக்கு உகந்த நீடித்த நிலையான விவசாய நடைமுறைகளை பெருமளவில் கார்பன் டை ஆக்ஸைடு மண்ணில் சேமிக்க முடியும். இவ்வாறு சேமிக்கப்படும் கார்பன் அளவைக் கணக்கிட்டு அதற்கான சான்றிதழ்களாக மாற்றி பணமாக பெரும் வாய்ப்பை விவசாயக் கார்பன் கிரெடிட் திட்டம் வழங்குகிறது.

**கார்பன் சேமிப்பை அதிகரிக்கும் வழிகள்**

1) மண்ணை ஆழமாக உழாமல் குறைந்த அளவு உழுதல்

2) மூடு பயிர் வளர்த்தல் (MULCHING)

3) நெல் பயிரில் பாய்ச்சலும் காய்ச்சலும் (AWD).

4) இயற்கை உரங்களை பயன்படுத்துதல்.

**எந்த எந்த நாடுகளில் கார்பன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளன? தெரியுமா?**

உலகளவில் விவசாய கார்பன் வர்த்தகத்தில் அமெரிக்கா, பிரேசில், ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகியவை முதன்மை வகிக்கின்றன. உலகின் மிகப்பெரிய நிலப்பரப்பை இந்தியா கொண்டுள்ளதால், வேகமாக வளர்ந்து வரும் முன்னணி கார்பன் வர்த்தக சந்தை யாக உருவெடுத்து வருகிறது.

**ஒரு ஏக்கரில் கார்பன் கிரடிட் எவ்வளவு?**

ஒரு ஏக்கர் வேளாண் நிலம் ஆண்டுக்கு சாரசரியாக 0.5 முதல் 3 கார்பன் கிரெடிட்கள் உற்பத்தி செய்யக்கூடும். நிலத்தின் தன்மை மற்றும் மரங்கள் வளர்ப்பு போன்ற முறைகளைப் பொறுத்தே சர்வதேச சந்தையில் ஒரு ஏக்கருக்கு × 5 முதல் × 35 டாலர் வரை வருமானம் தரும்.

**என்ன என்ன முறை கார்பன் கிரெடிட் கணக்கிடப்படுகிறது?**

இந்தியாவில் மத்திய அரசு அறிவித்துள்ள கார்பன் கிரெடிட் டிரேடு புல்ஸ்கீம் (CCTS) மற்றும் கீரின் கிரெடிட் புரோகிராம் ஆகியவற்றின் கீழ் பல்வேறு மாநிலங்களில் இத்திட்டத்தை வேகப்படுத்தி வருகின்றன. ஜார்க்கண்ட் மாநிலம் முன்னோடி யாக இந்த கார்பன் கிரெடிட் திட்டத்தை செயல்படுத்துகிறது.

பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் வைக்கோல் எரிப்பை தடுத்து நெல் சாகுபடியில் மீத்தேன் வாயுவை குறைக்கும் முறைகள் மூலமாக இத்திட்டத்தை செயல்படுத்தப் படுகிறது.

நிலத்தின் மண்வளத்தையும் விளைச்சலை பெருக்கி கால நிலை மாற்றத்திற்கு எதிரானது மகத்தான வாய்ப்பாக கார்பன் கிரெடிட் திட்டம் எதிர்காலத்தில் வளரும் என எதிர்பார்க்கபடுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மண் மற்றும் நீர் மாதிரி சேகரிப்பு பயிற்சி மற்றும் கரும்பு சாகுபடிக்கான தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (NFSM) திட்ட விழிப்புணர்வு



தஞ்சாவூர், ஆக.7

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் சப்னா ஆகியோர், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE - Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம், குறுங்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட தோழகிரிப்பட்டி கிராமத்தில் 7.8.26 அன்று விவசாயிகளுக்காக மண் மற்றும் நீர் மாதிரி சேகரிப்பு குறித்த செயல்விளக்கப் பயிற்சி மற்றும் கரும்பு சாகுபடிக்கான தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (NFSM) திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், மண் மற்றும் நீர் மாதிரிகளை அறிவியல் முறையில் சேகரிக்கும் முறை, மாதிரி எடுக்கும் இடம் மற்றும் ஆழம், மாதிரிகளை சரியான முறையில் ஆய்வகத்திற்கு அனுப்பும் நடைமுறைகள், மண் பரிசோதனையின் அவசியம் மற்றும் மண் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் சமச்சீர் உர மேலாண்மை மேற்கொள்வதால் மண் வளம் பாதுகாக்கப்பட்டு, உரச் செலவு குறைந்து மகசூல் அதிகரிக்கும் என்பது குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (NFSM) – கரும்பு திட்டத்தின் நோக்கம், மண் வள மேம்பாடு, நீர் சிக்கன தொழில் நுட்பங்கள், சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மை, தரமான நடவுப் பொருட்களின் பயன்பாடு, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் திட்டத்தின் கீழ் விவசாயிகள் பெறக்

கூடிய தொழில்நுட்ப ஆதரவுகள் குறித்து விரிவாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், மண் பரிசோதனை அடிப்படையில் உரமிடுவதன் மூலம் சாகுபடி செலவைக் குறைத்து, மண் வளத்தை மேம்படுத்தி, நிலையான அதிக மகசூலைப் பெற முடியும் என வலியுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் தோழகிரிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# பயறு வகை பயிர் சாகுபடி திறன் மேம்பாட்டுப் பயிற்சி!



சேலம், ஆக.7

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்திற்குட்பட்ட ஊனத்தூர் மற்றும் லத்துவாடி ஆகிய கிராமங்களில் பயறு வகை பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடைபெற்றது.

லத்துவாடி கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமிற்கு வேளாண் உதவி இயக்குனர் தலைமை தாங்கிப் பேசுகையில், பயறு வகை பயிர்களில் கூடுதல் மகசூல் பெறுவதோடு மண் வளத்தையும் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் சுப்ரமணியன் பயறு வகை பயிர்களில் விளைச்சலை பெருக்கு வதற்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் பெரியசாமி வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் நோய்த் தாக்குதலைத் தடுத்து வீரியமான பயிர் வளர்ச்சியைப் பெற விதை நேர்த்தி செய்யும் முறைகள் குறித்து விளக்கமளித்தார்.

இதேபோல் ஊனத்தூர் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சியில், வேளாண்மை அலுவலர் ஜானகி கலந்து கொண்டு பருவத்திற்கு ஏற்ற பயிர் ரகங்களைத் தேர்வு செய்யும் முறைகள் மற்றும் நவீன சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை சீராக வழங்கும் சமச்சீர் உர மேலாண்மை குறித்து உரையாற்றினார். தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் விவசாய நிலங்களில் மண் மாதிரி எடுக்கும் முறையை நேரடி செயல்விளக்கமாகச் செய்து காண்பித்து, அதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் திவ்யபாலா, நாகராஜ், தமிழ்ச்செல்வன் மற்றும் கார்த்திக் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். இப்பயிற்சியில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களைக் கற்றுப் பயனடைந்தனர்.

# கொய்யாவில் பகார் சிகிச்சை (Bahar Treatment) குறித்த விவசாயிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சி



மதுரை, ஆக.7

மதுரை மாவட்டத்தில் உள்ள அழகாபுரி கிராமத்தில் 5.8.26 (புதன்கிழமை) அன்று காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல் வேளாண்மைப் பீடத்தில் பயிலும் நான்காம் ஆண்டு வேளாண் மாணவிகள், விவசாயிகளுக்காக 'கொய்யாவில் பகார் சிகிச்சை' என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், குறிப்பாக சர்தார் கொய்யா ரகத்தில் பகார் சிகிச்சையின் அவசியம், செயல்முறை மற்றும் அதன் நன்மைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

**பகார் சிகிச்சை – செயல்முறை :** ஏப்ரல் மாத இரண்டாவது வாரத்தில் கோடைப் பூப்பை கட்டுப்படுத்த 10-15% யூரியா கரைசல் அல்லது 225 ppm NAA இலைவழி தெளிக்கப் படுகிறது. இதன் மூலம் தேவையற்ற கோடைப் பூக்கள் மற்றும் சிறிய காய்கள் உதிர்ந்து, மழைக்காலத்தில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைக்கப்படுகிறது.

மே மாதத்தில் கிளைகளில் சுமார் 50% வரை கவாத்து செய்யப்படுகிறது. பின்னர் 20-25 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் மற்றும் ஹிஜணலு (40:100:40 கிராம்/மரம்) அளித்து பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. ஜூலை மாதத்தில் 1% NPK + 0.5% துத்தநாக சல்பேட் + 0.4% போரான் இலைவழி தெளிப்பதன் மூலம் குளிர்கால மகசூலின் தரம் மேம்படுத்தப்படுகிறது.

**பகார் சிகிச்சையின் நன்மைகள்**

குளிர்காலத்தில் தரமான மற்றும் அதிக மகசூல் கிடைக்கிறது. பழத்தின் அளவு, இனிப்பு, உறுதித்தன்மை மற்றும் வைட்டமின் C சத்து அதிகரிக்கிறது. பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைகிறது. சீரான பூப்பும் காய்ப்பும் ஏற்படுகிறது. சந்தை மதிப்பு மற்றும் விவசாயிகளின் வருமானம் உயர்கிறது.

இந்நிகழ்ச்சியின் மூலம் பகார் சிகிச்சையின் அறிவியல் முறைகள் மற்றும் அதன் பொருளாதார நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. குளிர்காலத்தில் உயர்தர மகசூலைப் பெற்று அதிக இலாபம் ஈட்ட பகார் சிகிச்சை ஒரு சிறந்த பயிர் ஒழுங்குமுறை தொழில் நுட்பமாகும்.

# அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் வேளாண்மை துணை இயக்குனர் ஆய்வு!



சேலம், ஆக.7

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் வேளாண்மை துணை இயக்குனர் (மாநிலத் திட்டம்) நீலாம்பாள். வெள்ளாள குண்டம் மற்றும் மேட்டுப்பட்டி கிராமங்களில் உளுந்து, நிலக்கடலை மற்றும் சோளம் பயிர்களை பார்வையிட்டார். சோளம் மற்றும் நிலக்கடலை பயிருக்கு பயிர் காப்பீடு செய்து வைக்குமாறு அறிவுறுத்தினார்.

வறட்சியால் பாதிக்கப்படும் அனைத்து பயிர்களுக்கும் PPFM - (Pink Pigmented Facultative Methylotrops) கரைசல் தெளிக்க அறிவுறுத்தினார். இது பயிர்களின் வளர்ச்சியை தூண்டும். விதை முளைப்பு திறனை அதிகரித்து நாற்றுக்கள் வளர்ச்சியை துரிதப்படுத்தும்.

மேலும் வளர்ச்சியை தாங்கும் சக்தியை பயிர்களுக்கு கொடுத்து, பூக்கள் மற்றும் காய்கள் உதிர்வதை தடுத்து மகசூலை உயர்த்துகிறது என்று விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

இவ்வாய்வின் போது அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, துணை வேளாண்மை அலுவலர் பிரபாகரன், வேளாண்மை அலுவலர் பிரியா உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# விதைத் தரம் பேணுவதில் ஈரப்பதத்தின் பங்கு!

சேலம், ஆக.7

வேளாண் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் விதைகளின் பங்கு இன்றியமையாதது. விதைகள் நல்ல தரத்துடன் இருப்பது அவசியம். விதைகள் நல்ல தரத்துடன் இருந்தால் மட்டுமே உற்பத்தியில் 15 சதவீதம் அதிகரித்த விளைச்சலுக்கு வழிவகுக்கும். நல்ல தரமான விதைகள் என்பது இனத்தூய்மை, புறத்தூய்மை, முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதம் பெற்றிருக்க வேண்டும்.

விதைகளை அதன் விதைப்பு காலம் வரும் வரை விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் விதைகளை சேமித்து வைப்பது அவசியம். விதை சேமிப்பின் போது ஈரப்பதம் மிகவும் அவசியம். சரியான ஈரப்பதம் உள்ள விதைகள் பூச்சிமற்றும் பூஞ்சாண தாக்குதலின்றி நீண்ட நாட்கள் சேமித்து வைக்க முடியும். ஒவ்வொரு பயிருக்கும் ஈரப்பத சதவீதம் மாறுபடும். நெல் அதிகபட்ச ஈரப்பதம் 13%, கம்பு, கேழ்வரகிற்கு அதிகபட்ச ஈரப்பதம் 12%, உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, எள் 9% இருக்க வேண்டும் மற்றும் விதைகள் சேமிப்பின் போது சாக்குப் பைகள் புதிதாக இருக்க வேண்டும். மாலத்தியன் 0.1 சதவீத கரைசலை மூட்டை நனையாமல் தானியங்கள் மேல்படாமல் அளவாக தெளிக்க வேண்டும். இதன் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் 2 மாதங்களுக்கு ஒரு முறை விதை மாதிரிகளை எடுத்து விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் பரிசோதனை செய்து அதன் முடிவுகளின் படி சில பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்ளலாம்.

விதைகளைப் பரிசோதனை செய்ய ரூ.80/- கட்டணத்துடன் அறை எண் 403ல் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து பரிசோதனை செய்துக் கொள்ளலாம் என வேளாண்மை அலுவலர்கள் கவிதா மற்றும் நந்தினி ஆகியார் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உயிர்ம விவசாய பயிற்சி

விருதுநகர், ஆக.7

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டாரத்திற்குட்பட்ட சோழபுரம் கிராமத்தில், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் (PKVY) கீழ் உயிர்ம விவசாயம் தொடர்பான ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.



வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி தலைமை தாங்கி பயிற்சியை தொடங்கி வைத்தார். உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் கா.அரிபுத்திரன், உயிர் உரங்களின் பயன்பாடு, உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் முக்கியத்துவம், பஞ்சகாவ்யா, 3ஜி இலைக்கரைசல் உள்ளிட்ட இயற்கை இடுபொருட்களின் தயாரிப்பு மற்றும் பயன்பாடு, இயற்கை பூச்சிவிரட்டிகளின் பயன்பாட்டு முறைகள் ஆகியவை குறித்து செயல்விளக்கத்துடன் செயல்விளக்கத்துடன் பயிற்சி அளித்தார்.

மண்வளம் மற்றும் சத்து மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நவீன தொழில்நுட்பம் ஆகியவை குறித்தும் விவசாயிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

பயிற்சியின் போது உயிர்ம சான்றிதழ் பெறுவதற்கான நடைமுறைகள், அதற்கான விதிமுறைகள் மற்றும் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி விளக்கமளித்தார்.

இப்பயிற்சியின் மூலம் இயற்கை மற்றும் உயிர்ம வேளாண் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்து, சான்றிதழ் பெற்று கூடுதல் வருமானம் ஈட்ட விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டனர்.

இப்பயிற்சி முகாமை துணை வேளாண்மை அலுவலர் ராமன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாராயணன், உதவி வேளாண் அலுவலர் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தினர்.

இப்பயிற்சியில் சோழபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு உயிர்ம விவசாய முறைகள் குறித்து விரிவான விளக்கங்களைப் பெற்றனர். பயிர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாடு குறித்த தொழில்நுட்பங்களை அறிந்து பயனடைந்தனர்.



# ஆடிப்பட்டம் – விவசாயிகளின் பொற்காலம்

தமிழ் மாதங்களில் ஆடி மாதம் விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமான காலமாகக் கருதப்படுகிறது. ஆடிப்பட்டம் தேடி விதை என்ற பழமொழி இதன் சிறப்பை வெளிப்படுத்துகிறது. இந்தக் காலகட்டத்தில் மழை, மண் ஈரப்பதம் மற்றும் பருவநிலை ஆகியவை சாகுபடிக்கு ஏற்ற சூழலை உருவாக்குகின்றன. அதனால் பல விவசாயிகள் தங்களின் ஆண்டு சாகுபடித் திட்டங்களை ஆடி மாதத்தை மையமாகக் கொண்டு அமைக்கின்றனர். இந்தப் பட்டத்தில் சரியான நேரத்தில் விதைப்பு மேற்கொள்ளப்பட்டால், பயிர்களின் வளர்ச்சியும் விளைச்சலும் சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடையே தலைமுறைகளாக நிலவி வருகிறது.

ஆடிப்பட்டம் பல்வேறு பயிர்களை விதைப்பதற்கான சிறந்த பருவமாகும். குறிப்பாக நெல், மக்காச்சோளம், கம்பு, சோளம், நிலக்கடலை, எள், உளுந்து, பாசிப்பயறு உள்ளிட்ட பயிர்கள் இந்தக் காலத்தில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. பருவமழை தொடங்கும் காலம் என்பதால் நிலத்தில் தேவையான ஈரப்பதம் கிடைக்கிறது. இதனால் விதைகள் விரைவாக முளைத்து, செடிகள் ஆரோக்கியமாக வளர வாய்ப்பு அதிகரிக்கிறது. மேலும் நீர்ப்பாசனச் செலவும் குறைவாக இருப்பதால், விவசாயிகளின் உற்பத்திச் செலவையும் கட்டுப்படுத்த உதவுகிறது.

ஆடிப்பட்டத்தில் வெற்றிகரமான சாகுபடிக்கு முன் கூட்டிய திட்டமிடல் மிகவும் அவசியம். நிலத்தை உழுது தயார்படுத்துதல், தரமான விதைகளைத் தேர்வு செய்தல், மண்பரிசோதனை செய்து உரத்திட்டத்தை அமைத்தல் போன்ற பணிகளை விவசாயிகள் முன்கூட்டியே மேற்கொள்கின்றனர்.

அதேபோல், மழை நிலவரத்தை கண்காணித்து அதற்கேற்ற வகையில் விதைப்பு நாட்களைத் தேர்வு செய்வதும் முக்கியமான நடைமுறையாக உள்ளது. சரியான திட்டமிடல் மூலம் பயிர் இழப்பைக் குறைத்து, அதிக மகசூலைப் பெற முடியும் இன்றைய விவசாயத்தில் ஆடிப்பட்டம் பாரம்பரிய முறைகளுடன் மட்டுமல்லாமல், நவீன தொழில்நுட்பங்களுடனும் இணைந்து செயல்படுகிறது. தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள், துளி நீர்ப்பாசனம், இயந்திர விதைப்பு, மண்பரிசோதனை மற்றும்

வானிலை முன்னறிவிப்பு போன்ற வசதிகள் விவசாயிகளின் பணியை எளிதாக்குகின்றன. மேலும் வேளாண் துறை வழங்கும் ஆலோசனைகள் மற்றும் புதிய சாகுபடி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் விளைச்சலை உயர்த்தும் முயற்சிகளும் அதிகரித்து வருகின்றன.

ஆடிப்பட்டம் என்பது வெறும் விதைப்பு காலம் மட்டுமல்ல, அது விவசாயிகளின் எதிர்கால நம்பிக்கையை விதைக்கும் பருவமாகவும் திகழ்கிறது. நல்ல மழை, போதுமான நீர் ஆதாரம் மற்றும் சரியான பராமரிப்பு கிடைத்தால், இந்தப் பருவத்தில் தொடங்கப்படும் சாகுபடி விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தை அளிக்கும். காலநிலை மாற்றம் போன்ற சவால்கள் இருந்தாலும், அறிவியல் சார்ந்த வேளாண் முறைகளையும் பாரம்பரிய அனுபவங்களையும் இணைத்து செயல்பட்டால் ஆடிப்பட்டத்தின் பயன் மேலும் அதிகரிக்கும்.

மேலும், சிவகங்கை – தொண்டி சாலையில், வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் செயல்பட்டுவரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில், பணி விதை மாதிரியாக விதைகளை சமர்ப்பித்து, மாதிரி ஒன்றுக்கு ரூ.80 கட்டணம் செலுத்தினால், விதைகளின் தரம் பரிசோதனை செய்யப்பட்டு அதிகாரப்பூர்வ முடிவறிக்கை வழங்கப்படும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி விவசாயிகள் விதைகளின் முளைப்புத் திறன் மற்றும் தரத்தை உறுதி செய்து, தரமான விதைகளை விதைத்து அதிக மகசூல் பெற்று பயனடையுமாறு விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.பாலகணபதி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண்மையில் உயிர்க்கரியின் தாக்கம் மற்றும் உற்பத்தி முறைகள் : ஒரு விரிவான வழிகாட்டி

விவசாயக் கழிவுகளைத் தீயிட்டுக் கொளுத்துவதால் ஏற்படும் காற்று மாசு, ரசாயன உரங்களால் மலடாகும் விளைநிலங்கள், பருவமழைப் பொய்ப்பால் ஏற்படும் கடுமையான வறட்சி, இவை அனைத்தும் இன்றைய விவசாயிகளின் முதன்மைச் சவால்களாக உருவெடுத்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் மிகக் குறைந்த செலவில், நிரந்தரத் தீர்வாக அமைவதுதான் உயிர்க்கரி தொழில்நுட்பம். இத்தொழில் நுட்பத்தைப் பற்றி மிக ஆழமாகவும், அதன் தயாரிப்பு மற்றும் பயன்பாட்டு முறைகளைப் பற்றியும் இங்கு விரிவாகக் காண்போம்.

**1. உயிர்க்கரி எவ்வாறு வேலை செய்கிறது?**

சாதாரண அடுப்புக் கரியை விட உயிர்க்கரி முற்றிலும் மாறுபட்டது. பயிர் எச்சங்களை ஆக்ஸிஜன் இல்லாத சூழலில் வெப்பப்படுத்துவதால், அதில் உள்ள மரப்பொருள் சிதைந்து, வெறும் நிலையான கார்பன் மட்டுமே எஞ்சுகிறது.

● **நுண்துளைகளின் கட்டமைப்பு** : உயிர்க்கரியை ஒரு நுண்ணோக்கி மூலம் பார்த்தால், அதில் கோடிக்கணக்கான சிறிய அறைகளும் துளைகளும் இருப்பதைக் காணலாம். இது மண்ணில் ஒரு 'நீர் சேமிப்புத் தொட்டி' போலவும், 'நுண்ணுயிர் தங்கும் விடுதி' போலவும் செயல்படுகிறது.

● **மின்சுமைப் பண்பு** : உயிர்க்கரியின் மேற்பரப்பில் எதிர்மறை மின்சுமை இருக்கும். இது மண்ணில் உள்ள நேர்மறை மின்சுமை கொண்ட ஊட்டச்சத்துக்களை (நைட்ரஜன், பொட்டா சியம், கால்சியம், மக்னீசியம்) தன்பால் ஈர்த்து வைத்துக் கொள் கிறது. மழை பெய்யும் போதோ அல்லது நீர் பாய்ச்சும் போதோ இந்தச் சத்துக்கள் நீரில் கரைந்து மண்ணின் அடிவயிற்றுக்குச் சென்று வீணாவதை இது தடுக்கிறது.

**2. உயிர்க்கரி தயாரிக்கும் முறைகள்**

உயிர்க்கரியை விவசாயிகளே தங்களது சொந்த நிலத்தில் மிக எளிதாகத் தயாரிக்க முடியும். அதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் செய்முறைகள் இதோ :

### அ) குழி முறை – பெரிய அளவிலான உற்பத்திக்கு

● படி 1 : நிலத்தில் தலைகீழ் கூம்பு வடிவில் அல்லது சதுர வடிவில் 4 அடி ஆழம், 4 அடி அகலம் கொண்ட குழியை வெட்ட வேண்டும். கூம்பு வடிவம் காற்று உள்ளே நுழைவதைக் கட்டுப்படுத்த உதவும்.

● படி 2 : குழியின் அடியில் காய்ந்த இலைகள், சிறு குச்சிகளை வைத்து நெருப்பு மூட்ட வேண்டும்.

● படி 3 : நெருப்பு நன்றாகப் பிடித்தவுடன், அதன் மேல் விவசாயக் கழிவுகளை (நெல் உமி, கரும்புச் சக்கை, தென்னை மட்டை, பருத்திக் குச்சிகள்) அடுக்கடுக்காகப் போட வேண்டும்.

● படி 4 : கழிவுகள் எரியும்போது வெள்ளை நிறப் புகை வராமல், நீல நிறப் புகை வரும் வரை காத்திருக்க வேண்டும். புகை நீல மாக மாறும்போது ஆக்ஸிஜன் தீர்ந்துவிட்டது என்று அர்த்தம்.

● படி 5 : மேல் அடுக்கு கரியாக மாறியதும், அடுத்த அடுக்கைப் போட வேண்டும். குழி நிரம்பும் வரை இதைச் செய்ய வேண்டும்.

● படி 6 : இறுதியாக, கழிவுகள் சாம்பலாக மாறுவதற்குள் (Ashing) அதன் மீது தண்ணீரைத் தெளித்தோ அல்லது ஈரமான மண்ணைப் போட்டு காற்றுப் புகாதவாறு மூடியோ நெருப்பை அணைக்க வேண்டும்.

### ஆ) பீப்பாய் முறை – சிறு விவசாயிகளுக்கு

பழைய 200 லிட்டர் இரும்புப் பீப்பாயை எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் அடிப்பகுதியில் சிறிய காற்றுத் துளைகளை இட வேண்டும். பீப்பாயினுள் கழிவுகளை இறுக்கமாக நிரப்பி, மேற்பகுதியில் நெருப்பு மூட்ட வேண்டும். நெருப்பு மேலிருந்து கீழ் நோக்கி எரியும். கழிவுகள் அனைத்தும் கரியானதும், பீப்பாயை ஒரு மூடி கொண்டு காற்றுப் புகாமல் மூடி, 2 மணி நேரம் ஆறவிட வேண்டும்.

### 3. ஊட்டமேற்றுதல்

மிக முக்கிய எச்சரிக்கை : உயிர்க்கரியைத் தயாரித்தவுடன் அதை அப்படியே நேரடியாக நிலத்தில் இடக் கூடாது. ஏனெனில், அது மண்ணில் உள்ள ஈரம் மற்றும் சத்துக்களைத் தானே உறிஞ்சிக் கொண்டு, தற்காலிகமாகப் பயிர்களுக்குச் சத்துக் குறைபாட்டை ஏற்படுத்திவிடும். எனவே, அதை 'ஊட்டமேற்றம்' செய்ய வேண்டும்.

**ஊட்டமேற்றும் முறை**

1. கரியை நன்கு தூளாக உடைக்க வேண்டும் (1 முதல் 5 மி.மீ அளவு).

2. 1 பங்கு உயிர்க்கரியுடன் 3 பங்கு தொழுவுரம் அல்லது மண்புழு உரம் கலக்க வேண்டும்.

3. இக்கலவையுடன் அமுதக்கரைசல், ஜீவாமிர்தம் அல்லது பஞ்சகவ்யா போன்ற திரவங்களை ஊற்றி, லேசான ஈரப்பதத்துடன் 2 வாரங்கள் நிழலில் வைக்க வேண்டும்.

4. இந்த 14 நாட்களில், உயிர்க்கரியின் நுண்துளைகளுக்குள் கோடிக்கணக்கான நன்மை செய்யும் நுண்ணுயிரிகளும், ஊட்டச் சத்துக்களும் குடியேறிவிடும். இப்போது இது நிலத்தில் இடத் தயாராக உள்ளது.

**4. மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள்**

உயிர்க்கரியை நிலத்தில் இடுவதால் மண்ணில் ஏற்படும் நீண்டகால மாற்றங்கள் கீழே உள்ள அட்டவணையில் விளக்கப் பட்டுள்ளன:

● மண் கார அமிலத்தன்மை மண்ணின் அடர்த்தி நுண்ணுயிர் பெருக்கம் நைட்ரஜன் இழப்பு அமிலத் தன்மையுள்ள மண்ணைச் சீராக்கி, நடுநிலைத் தன்மைக்குக் கொண்டு வருகிறது.

● களிமண்ணைத் தளர்த்தியாகவும், மணற்பாங்கான மண்ணை இறுக்கமாகவும் மாற்றி அமைப்பினை மேம்படுத்துகிறது.

● மண்ணில் உள்ள மண்புழுக்கள் மற்றும் நன்மை செய்யும் பூஞ்சை களின் எண்ணிக்கை 200% வரை அதிகரிக்கிறது. உரங்கள் நீரில் அடித்துச் செல்லப்படுவது 50% வரை தடுக்கப்படுகிறது.

**5. பயிர்களின் மகசூல் மற்றும் பொருளாதார லாபம்**

தமிழ்நாட்டின் முதன்மைப் பயிர்களில் உயிர்க்கரியின் தாக்கம் குறித்துப் பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன:

● நெல் மற்றும் தானியங்கள் : தூர்கள் அதிகமாக வெளிவரும். வறட்சியைத் தாங்கி வளரும் திறன் மேம்படுவதால், கதிர் பிடிக்கும் பருவத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டாலும் மகசூல் பாதிப்பது இல்லை. சராசரியாக 15 – 20% மகசூல் கூடுகிறது.

● பருத்தி மற்றும் கரும்பு : வேர்கள் ஆழமாக ஊடுருவிச் சென்று சத்துக்களை உறிஞ்சுகின்றன. கரும்பில் சர்க்கரைச் சத்து அதிகரிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

● **தோட்டக்கலைப் பயிர்கள் (தக்காளி, மிளகாய், கத்தரி) :** மண்ணின் ஈரப்பதம் தொடர்ந்து கிடைப்பதால், பூக்கள் உதிர்வது குறைந்து, காய்களின் அளவு மற்றும் தரம் கூடுகிறது.

**பொருளாதாரக் கணக்கீடு :** வழக்கமான விவசாயத்தில் ஒவ்வொரு வருடமும் உரம் மற்றும் தண்ணீருக்கான செலவு அதிகரித்துக் கொண்டே செல்லும். ஆனால், உயிர்க்கரி மண்ணில் சிதைவடைய குறைந்தது 500 முதல் 1000 ஆண்டுகள் ஆகும். எனவே, ஒருமுறை நிலத்தில் முதலீடு செய்தால், அடுத்த பல தலைமுறைகளுக்கு அதன் பலன் நீடிக்கும். ரசாயன உரங்களின் தேவை பாதியாகக் குறைவதால், விவசாயிகளின் நிகர லாபம் கணிசமாக உயர்கிறது.

### 6. உலகளாவிய கார்பன் வர்த்தகம்

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் உயிர்க்கரி உலக அளவில் பெரும் பங்கு வகிக்கிறது. மரங்களும் தாவரங்களும் மட்கும் போது, அவற்றில் உள்ள கார்பன் டை ஆக்சைடு மீண்டும் காற்றில் கலந்து விடுகிறது. ஆனால், அவற்றை உயிர்க்கரியாக மாற்றும் போது, அந்த கார்பன் காற்றில் கலக்காமல் மண்ணுக்குள் நூறு ஆண்டுகளுக்குச் சிறைபிடிக்கப்படுகிறது. வருங்காலத்தில், உயிர்க்கரியைப் பயன்படுத்தும் இந்திய விவசாயிகளுக்கு கார்பன் கிரெடிட் மூலமாகப் பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்து கூடுதல் வருமானம் நேரடியாகக் கிடைப்பதற்கான திட்டங்கள் தற்போது துவக்கப்பட்டு வருகின்றன. இது விவசாயிகளுக்கு ஒரு மாற்று வருவாய் மாடலாக அமையும்.

### முடிவுரை

வேளாண்மையில் உயிர்க்கரி என்பது ஏதோ ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல; அது அமேசான் காடுகளின் பழங்குடி மக்கள் கையாண்ட 'டெர்ரா பிரெட்டா' என்ற பாரம்பரிய உத்தியின் நவீன வடிவமே ஆகும். ரசாயன உரங்களாலும், தீவிர சாகுபடி முறைகளாலும் மலடாகி வரும் நமது தமிழ்நாட்டு விளை நிலங்களை மீட்டெடுக்க இதுவொரு மிகச்சிறந்த மற்றும் செலவில்லாத இயற்கை ஆயுதம்.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா.ரா மற்றும் பாமா.ம (இளங்கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**